முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அநுமான் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

10.02.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **மனமெனும் குரங்கினை அடக்க முடியா**
**மாயை வழி சிக்குண்டு தவிக்கும் மானிடா**
**ஞானமெனும் அற்புத வழியுண்டு**
**நம்பிவா வெல்லலாம் என்று அழைக்க**
2. அழைக்கும் கலியுக அவதார குரு
ஆறுமுக அரங்க ஞானி காட்டும்
பிழைபடா உண்மை ஞானவழியை
பின்பற்றி வர மனமாயை தனை அடக்கி
3. அடக்கியே உலக மாந்தர்கள் தேறுவரென
அற்புதம் கூறி **விளம்பி கலை திங்கள்**
**இடரிலா இருபானேழ் திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 27ம் நாள் 10.02.2019, ஞாயிற்றுக்கிழமை)**
**இயம்பிடுவேன் அநுமான் யானும்**
4. யானும் நித்ய பிரசன்ன ஆசியை
உலகோர் மேன்மைபெற உரைப்பேன்
ஞானமெனும் அரங்கன் சூட்சுமம்
நம்பினால்தான் முதலில் கிட்ட நேரும்
5. நேருமைபட சிந்தையை மாற்றவே
நேசக்கரமெனும் அரங்கன் காட்டும்
தருமவழியை பற்ற வேண்டும்
தன்னலமின்றி தயவை கூட்டி
6. கூட்டியே சேவை செய்திடவே
குறுகிய மனப்பான்மை யாவும்
பட்டென படிப்படியாய் விலகி
பரோபகார உயர் சிந்தை ஆகும்
7. ஆகவே அரங்க மகானின்
அருள் ஞானம்தனை அதுமுதலாய்
மகனே நீ அடையலாம் உறுதி
மாயத்திரை விலக வேணுமாயின்
8. வேணுமாயின் ஞானிகளின் பூசை
விடாது கலந்து வந்துமே
அனுதின நாம செபங்கள்
அழியாமை கண்ட ஞானிகள் பேரில்
9. பேரிலே இயன்ற வேளைதனில்
பிசகில்லா செய்து வருகவே
துரிதமாக விலக்கு கண்டு
தூயமனமாக மாயை வென்று

10. வென்றுமே உயர்வான வழியை
வேலவன் துணைபட அடைவாயப்பா
நன்றும் தீதும் பிறர்தர வாரா எனும்
நன்மொழிக்கு இணங்க மனம் வழி

11. வழிதனில் தெளிவு திடம் கண்டு
வள்ளல் நெறி தருமநெறி நின்றிட
அழியாமை பெற்று திளைப்பீரப்பா
அறிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அநுமான் அருளிய நித்திய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

மனம் என்கிற குரங்குபோல நிமிடத்திற்கு நிமிடம் நிலையாக நில்லாது பலவற்றையும் பற்றி தாவித் திரியும் மனதினை அடக்க முடியாமல், மனம் போன போக்கிலே சென்று மாயையுள் சிக்கி தவிக்கும் மனிதகுலமே விழித்துக் கொள், மாயையினின்று விடுபட்டு வா, ஞானமெனும் அற்புதமான பேரானந்த வழி ஒன்று உண்டு, நம்பிக்கையுடன் வா, மாயையை வென்று ஞானத்தை அடையலாம் என்று மனித குலத்திற்கே தாயன்போடு அழைப்பு விடுத்து அவர்களுக்கு உபதேசித்து வழி நடத்தி, கலியுக அவதார சற்குருநாதன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற பிழையற்றதும், ஜென்மத்தைக் கடைத்தேற்றவல்லதும், மரணமிலாப் பெருவாழ்வை தரவல்லதுமான உண்மை ஞான வழிதனை தவறாது பின்பற்றி வரவர, மனமாயைதனை அடக்கி உலக மக்கள் கடைத்தேறி விடுவார்கள் என்றே அரங்கனின் அற்புதங்களை உலகமெலாம் எடுத்துக் கூறியே உலக மக்கள் மேன்மையடையும் பொருட்டு **விளம்பி வருடம் தை மாதம் 27ம் நாள் 10.02.2019, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே அநுமான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அநுமான்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனை முருகப்பெருமானின் அவதாரம் என்றும் அவரே நம்மை கடைத்தேற்றவல்ல கலியுக ஞானி என்றும், அரங்கனின் திருவடியே நம்மை காக்கவல்லது என்றே முழுநம்பிக்கையோடு உளமார சந்தேகம் இன்றி ஏற்றுக் கொண்டு அரங்கனின் சூட்சுமங்களை அறிந்து கொண்டால்தான், ஞானம் என்பது கிடைக்குமப்பா. அரங்கனை நம்பினால்தான் ஞானமே கைகூடும். ஆதலினால் உங்களது சிந்தனைகளை, எண்ணங்களை மாற்றி நேர்மையுடன் நடந்து மாற்றம் அடையவே ஆறுமுக அரங்கன் காட்டும் அன்பினை நேசக்கரத்தினை ஏற்று அரங்கன் கூறும் தருமத்தின் வழிதனை முழுமனதாக ஏற்றுக் கொண்டு தருமத்தின் பாதையில் தவறாமல் நடந்திட வேண்டுமப்பா.

அவரவரும் தன்னலம் இன்றி தயவு உணர்வை கூட்டி தொண்டுகளை செய்திடவே உங்களது குறுகிய மனப்பான்மை யாவும் உங்களை விட்டு உடனடியாக படிப்படியாய் விலகி, பரோபகார உயர் சிந்தையாக மாறிடும். ஆதலினாலே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருள் ஞானம்தனை அரங்கனை உணர்ந்து அறிந்து சூட்சுமம் அறிந்த முதலாய், தர்மத்தின் வழிதனிலே நடக்க துவங்கிய முதலாய் மகனே நீ அடையலாம் இது உறுதியப்பா, அநுமன் யானும் உறுதி கூறுகிறேன், அரங்கனை நம்பினால் அருள் ஞானம்தனை அடையலாம் இது உறுதி உறுதி.

மக்களே உங்களது மாயத்திரை விலக வேண்டுமாயின், ஞானிகளின் பூஜைகளை இடைவிடாது செய்து ஞானபூஜைகளிலே கலந்து ஞானிகள் ஆசிகளை பெறுவதுடன், தினம்தினம் மறவாமல் ஞானிகளின் நாமஜெபங்களை, முற்றுப்பெற்ற ஞானிகளின் பேரில் இயன்ற அளவு பிசகில்லாமல் செய்து வரவர, துரிதகதியில் மாயையில் இருந்து விலக்கு கண்டு, தூயமனமாக ஆகி மாயையை வென்று உயர்வான வழிதனை ஞானவழிதனை முருகப்பெருமானின் துணைபட அடைந்திடுவாய் அப்பா.

**நன்றும் தீதும் பிறர்தர வாரா** எனும் நல்மொழிக்கு இணங்க நடந்து தமக்கு வரும் அனைத்தும் நமது வினைகளே என்று ஏற்றுக் கொண்டு தர்மத்தின் வழிதனிலே சென்று தெளிவு திடம் கண்டு வள்ளல் நெறியை பின்பற்றி தர்மத்தின் பாதையில் தொடர்ந்து செல்ல செல்ல நீங்கள் அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்று மேன்மை அடைவீரப்பா என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகோர்க்கு அறிவிக்கிறார் மகான் அநுமான்.

–சுபம்–